# புள்ளடியின் பலம்

தொகுப்பு 2 இதழ் 2 தேர்தல்கள் ஆணைக்குழு மே - ஆகஸ்ட் 2018


## தொகுப்பாளரின் குறிப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் நான்கு வருட மூலோபாயத் திட்டத்திற்கு அமைய இணங்காணப்பட்ட பிரதான கவனமீர்ப்பு பகுதிகள் (Trust areas) நான்கு ஆகும். இந்த கவனமீர்ப்பு பகுதிகளின் கீழ் ஏழு குறிக்கோள்கள் (Goads) இனங்காணப்பட்டதோடு, அதில் பிரதான குறிக்கோளாக அமைவது தகைமையுடைய அனைத்துப் பிரசைகளும் உள்ளடக்கப்பட்ட வருடாந்த தேருநர் இடாப்பொன்றைத் தயாரிப்பதாகும். முன்னர் தேர்தல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டிருந்த காலப்பகுதியிலும் வருடாந்த தேருநர் இடாப்பைத் தயார் செய்வது திணைக்களத்தின் பிரதான குறிகோளாகக் காணப்பட்டது. சனநாயக ஆட்சிமுறை காணப்படுகின்ற நாடொன்றில் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது மக்களின் வாக்குரிமைனாலேயேயாகும். மக்கள் வசமுள்ள இறைமை அதிகாரத்தை பிரயோகிப்பதற்காக வருடாந்த தேருநர் இடாப்பில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியிருப்பது கட்டாயமாக பூரணப்படுத்தியிருக்க வேண்டிய ஒரு தேவைப்பாடாகும்.

02. அதற்கமைய, தகைமையுடைய அனைத்து பிரசைகளையும் வருடாந்த தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு, 2012 வருடத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 01 ஆம் திகதி வாக்காளர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு முழு இலங்கையும் உள்ளடங்கும் விதத்தில் விரிவான பிரச்சார அடிப்படையிலான வாக்காளர்களை அறிவுறுத்தும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு வருடங்களிலும் வெவ்வேறுபட்ட தொனிப்பொருளில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இந்த வாக்காளர் தினம் வைபவம் வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாடுகளுக்கு கலங்கரை விளக்கத் தூணாக அமைந்தது. இலங்கை பூராகவும் வாழ்கின்ற அனைத்து மக்கள் பிரிவினர், அரச அலுவலர்கள், அரசியல் அதிகாரிகள், பாடசாலை மாணவ சமூகங்கள், தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் போன்ற தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பங்குதாரர் நிறுவனங்கள் வருடாந்த வாக்காளர் தின வைபவத்துடன் இணைந்து கொண்டுள்ளன. இந்த விரிவான அறிவுறுத்தல்கள் காரணமாக வருடாந்த வாக்காளர்களின் அதிகரிப்பொன்று காணப்படுவதோடு, அதன் மூலம் மூலோபாயத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு சாத்தியப்பாடு கிடைத்துள்ளது.

ஆதலால், தகைமையுடைய அனைத்து பிரசைகளையும் வருடாந்த தேருநர் இடாப்பில் உட்சேர்க்கும் சவால்மிக்க விடயத்தை சிறப்பாக வெற்றி கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்களில் ஆணைக்குழுவின் காலாண்டு வெளியீடான "புள்ளடியின் பலம்" செய்தி சஞ்சிகைக்கு பங்களிப்பு வழங்கக் கிடைக்கப்பெற்றமை காலத்திற்குப் பொருத்தமான ஒரு சந்தர்ப்பம் என்று குறிப்பிட்டால் அது மிகையானதல்ல.

அதற்கமைய, இம்முறை புள்ளடியின் பலம் சஞ்சிகையில் வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்புடைய விரிவான அனுபவங்களுடன் கூடிய கல்வியியலாளர்களினால் எழுதப்பட்ட பயனுள்ள பல கட்டுரைகள் மற்றும் வாக்காளர் தினக் கொண்டாட்ட புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பணிக்காக தமது அறிவு, காலம் மற்றும் உழைப்பை அர்ப்பணிப்புச் செய்த அனைவருக்கும் ஆணைக்குழுவின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

- தொகுப்பாளர்

# இலங்கையின் வாக்காளர் கணக்கெடுப்பு மற்றும் பதிவு செய்தல் செயற்பாடுகளின் பரிணாம வளர்ச்சி


பீ.எம். சிறிவர்தன
இளைப்பாறிய மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்


## அறிமுகம்

சனநாயக ஆட்சி முறையொன்றில் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் கிடைக்கப்பெறுவது, வாக்குரிமையுள்ள நபர்களுக்கு மாத்திரமே. வாக்குரிமை, நாட்டு மக்களின் அடிப்படை உரிமையொன்றாகவும் கருதப்படுவதால் அது நாட்டின் பிரதான சட்டமான அரசியல் அமைப்பு மூலம் விளக்கப்படுவதோடு, அதனோடு தொடர்புடைய வேறு சட்டங்களும் காணப்படுகின்றன.

தேர்தல் சந்தர்ப்பமொன்றில் வாக்குரிமை உரித்தாகின்ற நபர்களை இனங்காணல், தேருநர் இடாப்பு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கான சட்டமொன்றிக்கமைய அந்தத் தகைமை பெறுகின்றவர்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பதிவு செய்தல் உரிய அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

## 02. இலங்கையின் வாக்காளர் கணக்கெடுப்புச் சட்டங்கள்

**(01) 1910 ஆம் ஆண்டு தொடக்கம் 1929 ஆம் ஆண்டு வரை சட்டவாக்கக் கழக காலப்பகுதி**

(அ) 1910 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டம்

(ஆ) 1920 ஆம் ஆண்டின் (சட்டவாக்க கழக) அரச கட்டளைச் சட்டம்

(இ) 1923 ஆம் ஆண்டின் (சட்டவாக்க கழக) அரச கட்டளைச் சட்டம்

**(02) 1930 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு வரையான அரச பேரவைக் காலப்பகுதி**

(அ) 1930 ஆம் ஆண்டின் (அரசியல் அமைப்பு) (தேருநர் இடாப்பு) அரச பேரவைக் சட்டளைச் சட்டம்

(ஆ) 1931 ஆம் ஆண்டின் (சட்டவாக்கக் கழக) அரச கட்டளைச் சட்டம்

**(03) மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்றக் காலப்பகுதி**

(அ) 1946 (சட்டவாகக் கழக) அரச கட்டளைச் சட்டம்

(ஆ) 1946 (பாராளுமன்றத் தேர்தல்) அரச பேரவைக் கட்டளைச் சட்டம்

(இ) 1972 அரசியல் அமைப்பு

(ஈ) 1978 அரசியல் அமைப்பு

(உ) 1980 இன் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டம்

## 03. தேர்தல்கள் சட்டங்கள் மூலம் வாக்காளர் பதிவு செய்தல் நடவடிக்கைகளில் உள்ளடங்கும் பிரதான துறைகள்.

I. வாக்குரிமைக்கான தகைமைகள்
II. தேர்தல் தொகுதிகள்/ தேர்தல் மாவட்டங்கள்
III. பதிவு அலுவலர் நியமனம் மற்றும் அவர்களின் பணிகள்
IV. வாக்குரிமை உரித்தாகும் நபர்களின் தகவல்களைச் சேகரித்தல்
V. வாக்காளர்களின் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க ஆவணங்களைப் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தல்
VI. பூர்வாங்க ஆவணங்களுக்கு உரிமைக் கோரிக்கை மற்றும் ஆட்சேபனை சமர்ப்பிக்க இடமளித்தல்.
VII. அந்த உரிமைக் கோரிக்கை மற்றும் ஆட்சேபனை தொடர்பாக விசாரணை செய்தல்.
VIII. அந்த விசாரணை தொடர்பான தீர்மானம் தொடர்பில் மேன்முறைமீடு சமர்ப்பித்தல்.
IX. மீளாய்வு அலுவலர்கள்
X. இடாப்பை அத்தாட்சிப்படுத்தல்
XI. உரிய காலத்திற்கு ஒரு தடவை தேருநர் இடாப்பை மீளாய்வு செய்தல்.

## 04. வாக்குரிமைக்கான தகைமைகள்

வாக்காளரொருவராவதற்கு பொதுவாக நபரின் பிரசாவுரிமை, தகைமைபெறும் வயது, நபரின் சிறந்த உளச்சுகாதார நிலைமை, தேர்தல் தொகுதியினுள் வதிந்திருத்தல் மற்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதிமன்றத்தினால் குற்றவாளியொருவராக இல்லாதிருத்தல் போன்ற விடயங்கள் தகைமைகளாக அதிகமான நாடுகளில் அடிப்படையாகக் கொள்ளப்படுவதைக் காண முடிகின்றது. இலங்கையிலும் தேர்தல் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் வாக்காளரின் தகைமையைத் தீர்மானிப்பதற்குச் சட்டத்தின் மூலம் இவ்வாறான விடயங்கள் கருத்தில்

கொள்ளப்பட்டுள்ளமையைக் குறித்த சட்டங்களை ஆராயும் போது தெரியவருகின்ற ஒரு விடயமாகும். 1910 ஆம் ஆண்டு தொடக்கம் 1929 ஆம் ஆண்டு வரை சட்டவாக்க கழக உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் மாத்திரம் வாக்கினால் தெரிவு செய்யப்பட்டதோடு, ஏனையவர்கள் அலுவலர் பதவிக்கமைய மற்றும் இனங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றவாறு ஆளுநரால் தெரிவு செய்யப்பட்டனர். 1911 ஆம் ஆண்டில் வாக்கினால் தெரிவு செய்யப்பட்ட நான்கு பேர், 1920 இல் பத்துப் பேராகவும், 1923 இல் இருபத்தொன்பதாகவும் அதிகரித்தது.

1911 ஆம் ஆண்டில் நான்கு தேர்தல் தொகுதிகளிலிருந்து மூன்று இனங்களுக்குரிய பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு நேரிட்டதோடு, ஐரோப்பியர், நகர்புற மற்றும் கிராமிய ஆகிய இரண்டு தொகுதிகளில் மாத்திரம் வாக்காளராவதற்கு நபர்களால் பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள் சமமாகக் காணப்பட்டன. பறங்கியர் தேர்தல் தொகுதி, 1786.02.15 ஆம் திகதி அன்றைக்கு பறங்கியர் இனத்தவரின் வழிவந்தவர்களான ஒல்லாந்தர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, ஏனைய தொகுதிகளான இலங்கையர் தேர்தல் தொகுதியில் இந்நாட்டின் தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்குப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு கிட்டியது. ஐரோப்பிய நகர்புற தொகுதி, கொழும்பு, காலி மற்றும் கண்டி ஆகிய மாநகர அதிகாரப் பிரதேசங்கள் மூன்றிற்கு மட்டுப்படுத்தப்பட்ட போதிலும் ஏனைய தொகுதிகள் மூன்றும் முழுநாட்டிற்கும் பொதுவாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் வாக்குரிமை 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் கிடைக்கப்பெற்றது. 1910 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவில் அனைத்துத் தேர்தல் தொகுதிகளுக்கும் பொதுவான வாக்குரிமை கிடைக்கப்பெறாமையில் தாக்கம் செலுத்திய விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. குறித்த கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில் இலங்கை தேர்தல் தொகுதியில் வாக்காளராவதில் தாக்கம் செலுத்திய ஏனைய தேர்தல் தொகுதிகளுக்கு ஏற்புடையதல்லாத விஷேட தகைமைகள் விதிக்கப்பட்டிருந்தமை விஷேட அம்சமாகும். அந்த தகைமைகள் அனைத்தையும் அவதானிக்கின்ற போது அக்காலப்பகுதியில் ஆங்கில மொழி அனுபவத்தோடு, தொழில்களிலீடுப்பட்ட தரப்பினருக்கு மாத்திரம் இலங்கை தேர்தல் தொகுதியில் வாக்குரிமை கிடைக்கப்பெற்றிருந்தமை தெளிவாகின்றது.

1920 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய தாபிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகள் 16 இல் ஏழு தொகுதிகள், ஏழு மாகாணங்களுக்கு சமமாகக் காணப்பட்டது. (மத்திய, வடக்கு, தெற்கு, வடமேல், வடமத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ) எஞ்சிய மூன்று தொகுதிகள் மேல் மாகாணத்தின் மூன்று பகுதிகளுக்கு சமமாகக் காணப்பட்டது. 1911 இல் காணப்பட்ட ஐரோப்பிய நகர, கிராமிய மற்றும் பறங்கியர் ஆகிய தொகுதிகள் தொடர்ந்தும் காணப்பட்டன. 1911 இல் காணப்படாத புதிய இரண்டு தொகுதிகள் இம்முறை ஏற்படுத்தப்பட்டன. அது இலங்கை வர்த்தகர் சங்கம் மற்றும் கரைநாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் ஆகிய தொகுதிகளாகும். அது முறையே இலங்கை வர்த்தக சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும், கரைநாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்க அங்கத்தவர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டதோடு, அவை நில அடிப்படையில் பரந்து காணப்படாத தேர்தல் தொகுதிகளாகக் காணப்பட்டன.

1923 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய சட்டவாக்க சபையின் அங்கத்தவர்களில் 29 பேர் தேர்தல் தொகுதிகள் 28 இற்கமைய (ஒரு தேர்தல் தொகுதி, பல்லுறுப்பினர் தேர்தல் தொகுதியாகக் காணப்பட்டது) வாக்கின் மூலம் தெரிவுசெய்ய வேண்டியிருந்தது. இதற்கு முன்னர் காணப்பட்ட ஐரோப்பிய நகர, கிராமிய வர்த்தக மற்றும் பறங்கியர் ஆகிய தொகுதிகள் தொடர்ந்தும் காணப்பட்டன. நாட்டின் மாகாண மற்றும் வருமான மாவட்டங்களுக்கமைய ஏனையவை வேறுபிரிக்கப்பட்டிருந்தன. இம்முறை பதிவு செய்வதற்கு நபரொருவர் ஒருவருட காலம் தேர்தல் தொகுதியில் வதிந்திருத்தல் ஒரு தேவைப்பாடாகக் காணப்பட்டது. 12 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றவருக்கு வாக்குரிமை கிடைக்கப்பெறவில்லை.

1930 இல் சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்கள் 50 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டியிருந்ததோடு, அவற்றில் பதிவுக்காக விதிக்கப்பட்டிருந்த தகைமைகள் சமமாகக் காணப்பட்டன. இந்த தகைமைகளின் சமமான தன்மையை அதன் பின்னர் பாராளுமன்ற தேர்தல் முறையினுள்ளும் காண முடிந்தது. குறிப்பாக 1930 ஆம் ஆண்டிலிருந்து சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை காரணமாக 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமைக் கிடைக்கப்பெற்றது.

பிற்பட்ட காலத்தில் வாக்காளரொருவராவதற்கு தேர்தல் தொகுதியில் வதிந்திருக்க வேண்டிய காலம் தொடர்பான தகைமை அடிக்கடி மாற்றமடைந்து சட்டம் வலுவில் காணப்பட்டதோடு, பின்னர் குறிப்பான தினமொன்றில் (தகைமைபெறும் தினத்தில்) தேர்தல் தொகுதியில் சாதாரண வதிவைக் கொண்டுள்ள நபர்கள் தகைமைப்பெறுதல் வரை அச்சட்ட நிலைமை மாற்றமடைந்தது. தேர்தல் தொகுதியொன்றில் வதிவுக்காக குறிப்பிட்ட காலமொன்று தொகுதியில் வதிந்திருக்க வேண்டுமென்ற சட்டம் 1910 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இரண்டு ஐரோப்பிய தேர்தல் தொகுதிகளுக்காகவே காணப்பட்டன. அதற்கமைய தேருநர் இடாப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட வருடத்தின் சனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் அங்கு மூன்று வருடங்கள் வதிந்திருத்தல் வேண்டும். 1920 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் ஏற்புடையவாறு தேர்தல் தொகுதியொன்றில் வதிந்திருக்க வேண்டிய காலம் யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரான ஒரு வருட காலமெனச் சட்டமாக்கப்பட்டது. 1930 அரச பேரவை முறையின் கீழ் அக்காலப்பகுதி ஆறு மாதங்களாக மாற்றப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் முறையின் கீழ் வாக்குரிமை கிடைப்பதற்கான தகைமைகள் மேலும் சிக்கலடைந்தன. இக்காலப்பகுதியினுள் தேர்தல் சட்டங்களின் அடிப்படையிலும் இலஞ்ச குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றில் குற்றவாளியாக்கப்படுகின்ற ஒருவருக்கு மூன்று அல்லது ஏழு வருடங்கள் என்ற அடிப்படையில் வாக்குரிமை இழக்கச் செய்யப்படுகின்ற சட்டம் தயாரிக்கப்பட்டது. குறிப்பாக 1948 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை பிரசாவுரிமை தொடர்பான சட்டம் விதிக்கப்படல் 2003 ஆம் ஆண்டு வரையும் இடம்பெற்றுள்ளது. 1949.11.24 ஆம் திகதிய 1949 ஆண்டின் 48 ஆம் இலக்க தேர்தல்கள் திருத்தச் சட்டத்திற்கமைய இலங்கை பிரசைகளுக்கு மாத்திரம் வாக்குரிமைக் கிடைக்கப்பெற்றது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கின்ற போது இந்நாட்டிற்கு தோட்ட விவசாய நடவடிக்கைகளுக்காக இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த தமிழ் தோட்ட தொழிலாளர்கள் பல பரம்பரைகளாக நாட்டில் வதிந்திருக்கின்ற காரணத்தால் அப்பிரசைகளுக்கு பிரசாவுரிமையை வழங்குதல் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் இறுதியில் இவ்விரு நாடுகளிலும் பிரசாவுரிமை கிடைக்கப்பெறாத ஒரு தரப்பினர் இலங்கையில் வாழுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமை காரணமாக வாக்காளர் கணக்கெடுப்பின் போது குறிப்பாக தோட்டப் பிரதேசங்களின் வாக்காளர்களின் தகைமைகளைப் பரீட்சித்து குறிப்பிட்டுக் கொள்வதற்கு சாத்தியமான விதத்தில் வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங்களைத் தயாரிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு நேரிட்டது.

## 05. வாக்காளர்களைப் பதியும் அலுவலர்

ஏதேனும் பொதுமக்கள் பிரதிநிதிகள் நிறுவனமொன்றுக்கு வாக்கினூடாக பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு அடிப்படையான தேர்தல் தொகுதிகளுக்குரிய சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு நிறைவடைந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்காகவும் பதவிப்பெயரில் குறித்த அதிகாரியினால் பதிவு அலுவலர் ஒருவர் வீதம் நியமனம் செய்யப்பட்டு அது தொடர்பாக பகிரங்கப்படுத்தப்படும். அப்பணிகளுக்காக 1911 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பெரும்பாலும்












நியமனம் செய்யப்பட்டிருப்பது மாகாண அரசாங்க அதிபர்கள், நிருவாக மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியவர்களாவர்.

1911 ஆம் ஆண்டு தொடக்கம் 1923 ஆண்டு வரை சட்டவாக்கக் கழக வாக்கெடுப்பு முறையின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த பறங்கியர் தேர்தல் தொகுதி, வர்த்தகர் சங்கத் தொகுதி, கரைநாட்டு விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத் தொகுதி ஆகியவற்றின் பதிவு அலுவலர்களாக, முறையே ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட ஒருவர், இலங்கை வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஆகியவர்களும் மேலும் 1930 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்ட 03 தேர்தல் தொகுதிகளுக்காக பதிவாளர் நாயகமும் பதிவு அலுவலராக நியமனம் செய்யப்பட்டனர்.

தேர்தல் தொகுதியொன்றில் பதிவதற்குத் தகைமைபெறும் வாக்காளர்களை கணக்கெடுப்பதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் அதன் பின்னர் பூர்வாங்க ஆவணங்களை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தி தேவையானவர்களுக்கு உரிமைக் கோரிக்கை மற்றும் ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு இடமளித்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கை மற்றும் ஆட்சேபனை தொடர்பாக விசாரணைகளை நடாத்தி தீர்மானங்களை மேற்கொண்டு குறித்த தீர்மானங்களை உரிய தரப்பினருக்கு அறிவிப்பதும் அவரின் ஒரு பொறுப்பாகும்.

## 06. வாக்காளர் கணக்கெடுப்பு

தேர்தல் தொகுதியொன்றில் வாக்காளர் கணக்கெடுப்பு குறித்த சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் ஆரம்பித்து, நிறைவு செய்தல் பதிவு அலுவலரின் பொறுப்பென்பதோடு, 1911 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை நடாத்தப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பு முறை அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதென்பது உரிய சட்டங்களை ஆராய்ந்து பார்க்கும் போது தெளிவாகின்றது.

### அ. சட்டவாக்கக் கழக முறையின் கீழ் வாக்காளர் கணக்கெடுப்பு (1910)

i. தேர்தல் தொகுதியின் பதிவு அலுவலரினால் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்குத் தகைமையுடையவர்களுக்கு அதற்காக மூன்று மாத காலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கி அதற்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

ii. 1910 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 'அ' அட்டவணைக்கமைய விண்ணப்பப் படிவத்தின் தேர்தல் தொகுதியின் பெயர், விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தொழில், இறுதி பிறந்த திகதியில் வயது, விண்ணப்பதாரிக்கு தேர்தல் தொகுதியில் பதிவதற்குள்ள தகைமைகள் ஆகியனவற்றை அதில் குறிப்பிடுதல் வேண்டும்.

iii. பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் திருப்தியடைந்து குறித்த பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, விண்ணப்பத்திலுள்ள விடயங்கள் தொடர்பாக வேறு முறையொன்றில் விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

iv. விண்ணப்பத்திற்கமைய தயாரிக்கப்பட்ட பூர்வாங்க ஆவணம் தேர்தல் மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ள கச்சேரி மற்றும் வேறு இடங்களில் தினமொன்றிற்கு நியாயமான மணித்தியாலங்கள் வீதம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த காட்சிப்படுத்தல் தொடர்பில் வர்த்தமானியிலும், ஆங்கில மொழிப் பத்திரிகைகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் காட்சிப்படுத்தல் காலம் 04 வாரங்கள் என்பதோடு, இந்தக் காலப்பகுதியினுள் தேவையான ஒருவருக்கு உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபனைகளைப் பதிவு அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

v. 10 நாட்கள் கொண்டதாக குறித்த தரப்பினருக்கு உரிமை/ ஆட்சேபனை விசாரணை தொடர்பாக அறிவித்து அந்த விசாரணை நீதிமன்றத்தில் அல்லது தமது அலுவலகத்தில் நடாத்துவதற்கு பதிவு அலுவலரால் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் முடிவுகள் கிடைக்கப்பெற்று 10 நாட்களினுள் முடிவுகள் தொடர்பாக மேன்முறைமீடு மீளாய்வு அலுவலருக்கு சமர்ப்பிப்பதற்கும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வு அலுவலர் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற அலுவல்கள் தொடர்பான அறிவுடையவொருவராகக் காணப்பட்டார்.

vi. உரிமை, ஆட்சேபனை விசாரணையின் பெறுபேறு, மேன்முறைமீட்டு விசாரணை பெறுபேறு என்பவற்றைக் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பு இறுதியில் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

சட்டவாக்கக் கழக முறைமையின் கீழ் இந்தச் சட்டங்கள் 1920 மற்றும் 1923 ஆம் ஆண்டுகளில் சிறு மாற்றங்களுக்குட்பட்டுள்ளன. 1920 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய வாக்காளர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலருக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் ஒரு மாதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

### ஆ. சட்டவாக்கக் கழக முறையின் கீழ் வாக்காளர் கணக்கெடுப்பு (1930)

டொனமூர் ஆணைக்குழுவின் முன்மொழிவிற்கமைய 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் சட்டவாக்கக் கழக முறையின் கீழ் வாக்குரிமைக் கிடைக்கப்பெற்றமை அப்போதைய மாகாணங்களின் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் தொகுதி எல்லை நிருணய ஆணைக்குழுவினால் நாட்டை 50 தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தமை, அனைத்து தேர்தல் தொகுதிகளுக்காகவும் இலங்கையருக்கு சமமான தகைமையின் கீழ் அவற்றில் வாக்குரிமைக் கிடைக்கப்பெற்றமை ஆகிய விடயங்கள் இக்காலப்பகுதியில் 'வாக்குரிமை' தொடர்பான விஷேட விடயங்களாகக் குறிப்பிட முடியும். அதற்கு மேலதிகமாக சட்டவாக்க கழக முறைமையின் கீழ் வாக்குரிமைக் கிடைக்கப்பெற்றிருந்த ஐரோப்பியர்களுக்கும் மற்றும் இந்திய தோட்டத் தமிழ் மக்களுக்கும் சில விதிவிலக்குகளுக்குட்பட்டதாக வாக்குரிமை சட்டவாக்க கழக முறையின் கீழ் கிடைக்கப்பெற்றமையும் முக்கிய விடயமொன்றாக குறிப்பிட முடியும்.

1931 (அரசுப் பேரவைத் தேர்தல்) அரச பேரவைக் கட்டளை, 06 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தகைமையீனமொன்றுக்கு உட்பட்ட நபரொருவருக்கு எந்தவொரு தேர்தல் தொகுதியிலும் வாக்குரிமைக் கிடைக்கவில்லை. பிரித்தானிய நாட்டு நபரொருவராக இல்லாமை, ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதிக்கு 21 வயது பூர்த்தியடையாமை, அன்றைய தினத்திற்கு தேர்தல் தொகுதியில் இறுதி 18 மாதங்களில் 06 மாதங்கள் தொடர்ச்சியாக வதிந்திராமை, மரண தண்டனை அல்லது 12 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படல், நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவராகவிருத்தல் மற்றும் 1931 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய தேர்தல் ஊழலொன்றுக்கு அல்லது சட்டவிரோதமான செயற்பாடொன்றிற்கு குற்றவாளியொருவராக்கப்படல் என்பன குறித்த வாக்குரிமை இழக்கச் செய்யப்படுவதில் தாக்கம் செலுத்தியிருந்தன.

குறித்த கட்டளைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 'ஆ' எழுத்துடைய படிவத்திற்கமைய தகைமைபெறுகின்ற வாக்காளர்களின் அடிப்படையில் பதிவுக்காக தேர்தல் தொகுதியின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உரிய காலத்தினுள் தனது விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் திருப்தியடைந்து குறித்த பதிவை மேற்கொள்ளல் அந்த அலுவலரினால் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதிகுள்ள தகைமையின் அடிப்படையில் குறித்த நபர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, அவை செப்தெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெறல் வேண்டும். உரிமை மற்றும் ஆட்சேபனை தொடர்பான விசாரணைகளை



நடாத்தி அவற்றின் முடிவுகளையும் கருத்தில் கொண்டு இறுதித் தேருநர் இடாப்பு தயாரிக்கப்பட்டது.

1936 அரச பேரவைத் தேர்தலுக்காக 1935 தேருநர் இடாப்பு மேற்குறிப்பிட்ட முறைமையை விடவும் வேறு முறையொன்றில் மீளாய்வு செய்யப்பட்டது. 1931 ஆம் ஆண்டின் சட்டத்திற்கமைய பிறப்பு இலங்கையில் நிகழ்ந்த பின்னர் இங்கு வதிந்திருக்கின்ற இலங்கையர்கள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இலங்கையில் வதிந்திருந்த இந்தியத் தோட்ட தொழிலாளர்களுக்கு அவர்கள் 1935 ஆம் ஆண்டாகும் போது தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருப்பின் அதேவிதத்தில் 1935 தேருநர் இடாப்பிற்கு விண்ணப்பங்கள் பெறப்படாமல் அவர்களின் பெயர்கள் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டன. கிராமத் தலைவர்கள், தோட்ட அத்தியட்சகர்கள் மற்றும் தற்காலிக கணக்கெடுப்பு அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு குறித்த நபர்களின் தகவல்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டன. இதற்காக கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் கணக்கெடுப்பு அலுவலர்களாக இம்மாநகர சபையின் பரீட்சகர்கள் அவர்களின் பொதுவான அலுவலக நேரத்திற்கப்பால் ஈடுபடுத்திக் கொள்ளப்பட்டனர்.

**இ. 1946 இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச கட்டளையின் கீழ் வாக்காளர்களை கணக்கெடுத்தல்.**

இந்த அரச கட்டளையின் 04 ஆம் பிரிவின் வாக்காளரொருவராவதற்கு நபரொருவர் பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன. அது பின்னர் இத்தகைமைகள் திருத்தங்களுக்குட்படுத்தப்பட்டன.

இருப்பினும், 1946 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி நிறைவுசெய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிருணய ஆணைக்குழு அறிக்கைக்கமைய தாபிக்கப்பட்ட 89 தேர்தல் தொகுதிகளுக்குரிய முதலாவது தேருநர் இடாப்புத் தயாரித்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 1946 மே மாதம் 15 ஆம் திகதிய 1946 இலங்கை (தேர்தல் இடாப்பு) (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. அதற்கமைய 1931 இலங்கை (சட்டவாக்கக் கழக தேர்தல்) அரச பேரவைக் கட்டளைக்கமைய தயாரித்து நிறைவு செய்யப்பட்டு இறுதியாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 50 தேர்தல் தொகுதிகளுக்குரிய இடாப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பெயர்கள் புதிய 89 தேர்தல் தொகுதிகளின் எல்லைகளுக்கமைய அவற்றில் உட்சேர்க்கப்பட்டு புதிய தேர்தல் தொகுதிகளின் தேருநர் இடாப்பு 1946 செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. அந்த இடாப்பில் புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கு மற்றும் அதிலிருந்து நீக்க வேண்டிய பெயர்களை நீக்குவதற்குரிய உரிமை மற்றும் ஆட்சேபனையை சமர்ப்பிப்பதற்கு 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச கட்டளையின் ஏற்பாடுகளுக்கமைய அவகாசமளிக்கப்பட்டது.

தேருநர் இடாப்பு மீளாய்வுக்காக ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் மற்றும் பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிட்டு தகைமையுடைய நபர்கள் குறித்த தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. இவ்வாறு நபர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்த தேர்தல்கள் அரச கட்டளையின் 13(3) ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத் தேர்தல்கள் ஆணையாளருக்குக் காணப்பட்ட தத்துவத்திற்கமைய அதற்கான மாதிரிப் படிவமொன்று 1948 யூலை மாதம் 04 ஆம் திகதிய 9873 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது. அப்படிவத்தின் முதலாம் பகுதியில் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் பின்வருமாறு, பல நிரல்களின் கீழ் வீட்டுத் தலைவரினால் குடும்பத்தில் தகைமைபெறுகின்ற அனைவருக்காகவும் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த வீட்டுத் தலைவருக்கு குறித்துரைக்கப்பட்ட படிவமொன்றின் மூலம் குடும்பத்தின் அனைவருக்காகவும் பதிவு அலுவலருக்கு தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இதனை குறிப்பிட முடியும். இந்த படிவத்தில் உரிய நிரலின் கீழ் பின்வரும் விடயங்களை உட்சேர்த்தல் வேண்டும்.

(1) யூன் மாதம் 01 ஆம் திகதிக்கு 21 வயதிற்கு மேற்பட்டவரின் முழுப் பெயர்
(2) ஆண், பெண் பால்நிலை
(3) யூன் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னரான 18 மாத காலத்தினுள் 06 மாதங்கள் தொடர்ச்சியாக வதிந்திருந்த முகவரி
(4) முன்னர் பதிவு செய்யப்பட்ட முகவரி
(5) இந்திய அல்லது பாகிஸ்தான் வம்சாவளியைக் கொண்டுள்ள நபர்களுக்குரிய விடயங்கள் (இலங்கையில் வாழ்ந்த காலம், இலங்கையில் பிறந்த ஒருவராவென்பது பற்றிய விபரம், திருமணமானவரா என்பது, கணவன்/ மனைவி இலங்கையில் வதிந்திருப்பின் அவர்கள் கடந்த 10 வருடங்களினுள் இந்தியாவிற்கு/ பாகிஸ்தானுக்கு பயணித்த தடவைகளின் எண்ணிக்கை மற்றும் அவ்வாறு பயணம் செய்தமைக்கான காரணங்கள்)

இந்த படிவத்தைப் பூரணப்படுத்தி உரிய தினத்திற்கு முன்னர் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அந்த படிவத்தின் இரண்டாம் பகுதி வீட்டுத் தலைவரினால் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்க தகவல்களில் ஏதேனும் குறைபாடொன்றிருப்பின் அதற்காக விசாரணையொன்றை மேற்கொண்டு அத்தகவலை அந்த அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காகவாகும்.

வீட்டுத் தலைவரிடமிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் தேருநர் இடாப்புத் தயாரிப்பது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. தகவல்கள் நடைமுறை தேருநர் இடாப்போடு ஒப்பிட்டு பார்த்து அதிலிருந்து நீக்க வேண்டியேற்படுகின்ற பெயர்கள் மற்றும் இடாப்பில் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற பெயர்கள் ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு கச்சேரிகள் மற்றும் வேறு பொருத்தமான இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தல். (பிற்காலத்தில் இந்த காட்சிப்படுத்தல் காலம் 04 வாரங்களாக மாற்றப்பட்டுள்ளது)
2. காட்சிப்படுத்தல் காலத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற உரிமை/ ஆட்சேபனைக்கமைய விசாரணைகளை நடாத்தி இறுதியில் தகைமைபெறுகின்ற பெயர்களை உட்சேர்த்து இடாப்புத் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. அது தொடர்பில் பத்திரிகைகளிலும் வர்த்தமானியிலும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டன.

## 07. 1946 ஆம் ஆண்டின் பின்னர் வாக்காளர் கணக்கெடுப்போடு தொடர்புடைய சட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள்

**(01). இலங்கை பிரசாவுரிமையைக் கொண்டுள்ளவர்களுக்கு இலங்கையின் வாக்குரிமையை மட்டுப்படுத்தல். (1949)**

1948 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரித்தானிய குடியேற்ற நாடான இலங்கையின் மக்கள் இக்காலப்பகுதியில், பிரித்தானிய நாட்டு மக்கள் என அழைக்கப்பட்டனர். உரிய தேர்தல் சட்டங்களிலும் அவர்கள் அவ்வாறே அழைக்கப்பட்டனர். 1948.02.04 ஆம் திகதி இலங்கைத்தீவு சுதந்திர நாடாக மாறியதன் பின்னர் இலங்கை குடியுரிமைக்கான சட்டங்கள் வகுக்கப்பட்டதோடு அச்சட்டங்கள் மூலம் இலங்கைக்கு குடியுரிமை கிடைத்தமை, வாக்குரிமைக்கான பிரதான தேவைப்பாடொன்றாகக் காணப்பட்டது. இலங்கையின் முதலாவது குடியுரிமைச் சட்டமான 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டத்தின் பின்னர் அது தொடர்பாக மேலும் சட்டங்கள் வகுக்கப்பட்டன.

1949 ஆண்டின் 48 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டத்தினால், வாக்குரிமை உரித்தாகின்ற நபர்கள் இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டது.



**(02) பன்மைப் பதிவு சட்டரீதியானதல்ல என்பதால் நபர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்தல் ஒரு முகவரிக்கு வரையறை செய்தல் (1949 ஆண்டின் 48 ஆம் இலக்க திருத்தச் சட்டம்)**

இது தொடர்பான புதிய பிரிவொன்று 16(7) உட்பிரிவு என்ற வகையில், முதன்மைச் சட்டமான 1946 இலங்கை (பாராளுமன்ற தேர்தல்கள்) அரச கட்டளைக்கு உட்சேர்க்கப்பட்டது. அதற்கமைய ஒரு முகவரிக்கு மேற்பட்ட முகவரிகளின் கீழ் பெயரொன்றைப் பதிவு செய்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அல்லது ஆவணப்படுத்தப்பட்டிருப்பின், சம்பந்தப்பட்ட நபரின் பெயரை உள்ளடக்க வேண்டிய ஒரு முகவரி தொடர்பாக மேற்படி நபரின் விருப்பத்தை உசாவி அது தொடர்பாக முடிவெடுப்பதற்குப் பதிவு அலுவலருக்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றது.

**(03) வருடாந்த வாக்காளர் பெயர்ப்பட்டியல் (தேருநர் இடாப்பு) பணிகளை நிறைவு செய்வதற்கான காலப்பகுதியைத் தீர்மானித்தல் (1950 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க திருத்தச் சட்டம்)**

முதன்மைச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வு செய்யப்படுகின்ற தேருநர் இடாப்பின் நடவடிக்கைகள் ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்கு அல்லது அவ்வாறு இல்லையெனின் தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள் வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலமாக குறிப்பிட்டுள்ள திகதியை அதற்காக தீர்மானிக்க முடியும். எனினும் இந்தத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மேற்படி தேருநர் இடாப்பு நடவடிக்கைகள் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியாகும் போது நிறைவடையவில்லையெனில், அதற்காக அடுத்த வருடத்தின் சனவரி மாதம் 31 திகதிக்கு பின்னரல்லாத திகதியொன்றை ஆணையாளர் அவர்கள் தீர்மானிக்க முடியும்.

**(04) உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்களுக்காக தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல் (1951 நிருவாக அறிக்கையின் படி)**

கிராமசபை அதிகாரப் பிரதேசங்களுக்கு உரியதாக தேருநர் இடாப்புக்களைத் மீளாய்வு செய்தல், செப்தெம்பர் 01 ஆம் திகதி மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பட்டின சபை ஆளுகைப் பிரதேசங்களில் தேருநர் இடாப்பு மீளாய்வு, அத்தகைய தினத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பு, கண்டி மாநகர சபை பிரதேசங்களில் வாக்காளர் கணகெடுப்பு தேர்தல்கள் அலுவலகங்களினால் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலமாகவும் ஏனைய பிரதேசங்களில் அந்த நடவடிக்கைகள் கிராமத் தலைவர்கள் மூலமாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

1953 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைக் கட்டளைச் சட்டத்தின் 15 (3) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தல்கள் ஆணையாளர் அவர்கள் உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவல்கள் பற்றிய ஆணையாளருக்கு, பாராளுமன்றத் தேர்தல்கள் தேருநர் இடாப்பின் உரிய விபரங்களை உள்ளூராட்சி தேர்தல்களுக்கான தேருநர் இடாப்புக்களைத் தயாரிப்பதற்காக வழங்க வேண்டியிருந்தது. இதற்கமைய இந்தச் சந்தர்ப்பமாகும் போது, உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்களுக்கு அவசியமான தேருநர் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருப்பது. பாராளுமன்றத் தேர்தலுக்கான தேருநர் இடாப்புக்களாகும்.

மேற்படி நிலைமைகாரணமாக ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கையொன்றுக்கு ஏதேனும் ஒரு வருடத்தில் உள்ளூராட்சி தேர்தலொன்று நடத்தப்படவிருப்பின் அந்த ஆண்டில் பாராளுமன்ற தேருநர் இடாப்புக்குரிய வாக்காளர்கள் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ள ஆர்வம் காட்ட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவித்தல் கொடுப்பது வழக்கமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. தற்போது பாராளுமன்ற தேர்தல்கள் தேருநர் இடாப்பு மாத்திரம் தயாரிக்கப்பட்டு அது உள்ளூராட்சி தேர்தல்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது.

**(05) பெரும்பான்மை மக்களின் மற்றும் சிறுபான்மை மக்களின் மொழியில் . தேருநர் இடாப்பைத் தயாரித்தல் (1956 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தச் சட்டம்)**

முதன்மைக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தேருநர் இடாப்புக்களை ஆங்கில மொழியில் தயாரித்தல் வேண்டும். தேருநர் இடாப்புக்கள் முழுமையாக, தேர்தல் தொகுதியொன்றில் இடைத்தேர்தலொன்று அல்லது பாராளுமன்றத் தேர்தலொன்றை நடத்த வேண்டியுள்ள சந்தர்ப்பமொன்றின் போது தேர்தல்கள் ஆணையாளரின் ஆணைப்படி அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ளப்பட்டன. தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது, அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள இறுதி தேருநர் இடாப்புடன் மீளாய்வுக்குரிய வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற 'அ' மற்றும் 'ஆ' பெயர்ப்பட்டியல்களாகும்.

1956 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் தேர்தல் தொகுதியொன்றில் தேருநர் இடாப்பு மேற்படி பிரிவின் பெரும்பான்மை மக்களின் மொழியில் தயாரிப்பதற்கு விதிக்கப்பட்டது. மேலும், அத்தகைய தொகுதியொன்றில் மக்கள் எண்ணிக்கையில் 20மூ இற்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் சிறுபான்மையினரைக் கொண்ட மாவட்டமொன்றெனில் அவர்களின் மொழியிலும் அந்த தேருநர் இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

**(06) தேர்தல் தொகுதியொன்றில் வதிவு மற்றும் சாதாரண வதிவு**

முதன்மைக் கட்டளைச் சட்டத்தின 4 (இ) பிரிவின் பிரகாரம், வருடமொன்றின் யூன் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னரான 18 மாதங்களினுள் தொடர்ச்சியாக 6 மாதங்கள் தேர்தல் தொகுதியொன்றில் வசித்திருத்தல், தேருநர் ஒருவராக உரிய தேர்தல் தொகுதியில் பதிவு செய்தலுக்காகப் பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு தேவைப்பாடாகும். 1964 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால், இந்த பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக உட்சேர்க்கப்பட்ட புதிய பிரிவின் பிரகாரம் வருடமொன்றின் யூன் மாதம் 01 ஆம் திகதி, ஒருவரின் தேர்தல் பிரிவில் சாதாரண வதிவு, பதிவு செய்வதற்குப் போதுமானதாகும்.

விஷேடமாக 1970 தசாப்தம் முதல் பாரிய வகையில் தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் வாக்குரிமை தொடர்பாக இந்த சாதாரண வதிவு தொடர்பான சட்ட நிலைமை தேர்தல்கள் ஆணையாளர் மூலம் சட்டமா அதிபரிடம் உசாவப்பட்டது. அதற்கமைய 1981 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 02 ஆம் திகதி சட்டமா அதிபர் அவர்கள் தனது கருத்துக்களை வெளிப்படுத்தி அறிவித்துள்ளதாவது, எவரேனும் ஒரு நபர் தொழில் அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக நாட்டிற்கு வெளியே சென்றிருப்பின், அவருக்கு இந்நாட்டிற்கு வருகைதர உரித்துடைய இடம், அவரது சாதாரண வதிவிட முகவரியாகக் கருதி நடவடிக்கை எடுக்க முடியும் என்பதாகும். விஷேடமாக அவ்வாறு செய்ய வேண்டியது, குறித்த நபரின் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் அத்தகைய இடத்தில் வசித்து வந்தால் மாத்திரமேயாகும். அதன்படி இந்த விதத்தில் வெளிநாடு சென்று கல்வி மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அவர்களின் சாதாரண முகவரியின் கீழ் பதிவு செய்வதற்காகப் பரிந்துரைக்க முடியும் என்பது தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் பதிவு அலுவலர்கள் மூலமாக கணக்கெடுப்பு அலுவலர்கள், 1981 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பத்தின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**(07) மூன்று வருடங்களுக்கொரு முறை 'அ' பட்டியல் படுத்தப்படுகின்ற பெயர்களுக்குரிய நபர்களுக்கு தேருநர் இடாப்பிலிருந்து பெயர்கள் நீக்கப்படல் தொடர்பாக காரணங்கள் சகிதம் அறிவித்தல்**

1959 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் பிரதான கட்டளைச் சட்டத்திற்கு 18(3) ஆம் உட்பிரிவு அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய





தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு மூன்று வருடங்களுக்குப் பின்னர், ‘அ’ பட்டியல்படுத்தப்பட்ட பெயர்களுக்குரிய நபர்களுக்கு, அவ்வாறு பெயர் நீக்கப்படுவதற்கான காரணங்கள் பதிவு உத்தியோகத்தர்களினால் அறிவிக்கப்படல் வேண்டும்.

இதற்கமைய 1961 ஆம் ஆண்டு மற்றும் 1962 ஆம் ஆண்டு தேருநர் இடாப்புக்களில் பதிவு செய்யப்பட்ட வீடுகள், முறையே 1,392,667 மற்றும் 1,481,848 க்கு பிரித்தொடுப்புக்கள் அனுப்பப்பட்டு பதிவில் குறைபாடுகள் இருப்பின் திருத்தப்பட வேண்டிய முறை வீட்டுத் தலைவர்களிடம் உசாவப்பட்டுள்ளது. அதற்கான வீட்டுத் தலைவர்களின் பதிலளிப்பு உரிய இரண்டு ஆண்டுகளில் முறையே 15% மற்றும் 07% ஆகக் காணப்பட்டதாக, தேர்தல்கள் ஆணையாளரின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த சட்ட ரீதியான ஏற்பாடுகள் 1964 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் மூலம் இரத்துச் செய்யப்பட்டது.

**(08) வாக்குரிமை பெறுவதற்கு தகுதியுடைய வயதைக் குறைத்தல்**

முதன்மைக் கட்டளைச் சட்டத்தின் 4(1)(ஆ) பந்தியிற்கமைய, ஒருவர் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கு குறித்த வருடத்தில் யூன் 01 ஆம் திகதிக்கு 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். 1959 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் மூலம் இந்த வயது 18 வரை குறைக்கப்பட்டது.

**(09) தேருநர்களின் விபரங்களை வீட்டுத் தலைவர்களைக் கொண்டு படிவம் மூலம் பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளல். (1957 நிருவாக அறிக்கை)**

கணக்கெடுப்பு அலுவலர் ஒருவரால் வீடுகளில் வசிக்கும் வாக்காளர்களை கணக்கெடுப்பதற்குப் பதிலாக, முதல்முறையாக நாட்டின் சகல பிரதேசங்களிலுமுள்ள வீடுகளின் வீட்டுத்தலைவர்களுக்கும், வீடுகளில் வசிக்கும் வாக்காளர்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தல் சகிதம் மாதிரிப் படிவமொன்றை அவர்களுக்கு ஒப்படைப்பதற்கான வேலைத்திட்டமொன்று 1957 ஆம் தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**(10) வருடாந்த மீளாய்வுக்குரிய அ மற்றும் ஆ பட்டியல்களை ஒரே காலப்பகுதியினுள் காட்சிப்படுத்தல் (1957 நிருவாக அறிக்கை)**

நாட்டிலுள்ள எல்லா தேர்தல் தொகுதிகளுக்குரியதாக, முதற் தடவையாக தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பத்தில் ‘அ’ (நடைமுறை தேருநர் இடாப்பிலிருந்து அகற்றுவதற்கு உத்தேச பெயர்கள் உள்ளடக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் மற்றும் ‘ஆ’ (மீளாய்வு இடாப்பில் புதிதாக உட்சேர்ப்பதற்கு உத்தேச பெயர்கள் உள்ளடக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல், ஒரே காலப்பகுதில் காட்சிப்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதி 1957.12.27 தொடக்கம் 1958.01.24 திகதி வரையாகும்.

**(11) தேருநர்கள் பதிதல் சட்டம் அடங்கிய புதிய சட்டமொன்றை வெளியிடுதல்.**

இலங்கையில் தேருநர்களைப் பதிவு செய்தல் பணிகளுக்கான தனியான ஒரு சட்டமாக 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சட்டம் வெளியிடப்பட்டதோடு, அச்சட்டம் 1981.01.23 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னர் சட்டவாக்க சபை முறைமை மற்றும் 1946 பாராளுமன்ற தேர்தல்கள் முறைமை என்பவற்றின் கீழ் இந்தச் சட்டம் ஏனைய சட்டக் கோப்பின் ஒரு பகுதியாகவே காணப்பட்டது.

இதற்கு முன்னர் அரச மந்திரிகள் சபை சட்டத்தின் கீழ் தேருநர் இடாப்புத் தயாரித்தல் தொடர்பாக வேறான அரச சபை கட்டளையொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும் அது இவ்வாறு விரிவான ஒன்றில்லாமல் 19 பிரிவுகளை மாத்திரம் உள்ளடக்கிய ஒன்றாகக் காணப்பட்டது. (The Ceylon Constitution (Register of Electors) Ordinance Council 1930).

**(12) வாக்காளர்களின் தேசிய அடையாள அட்டை விபரங்களை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல்.**

1984 ஆம் ஆண்டு தொடக்கம் வீட்டுத் தலைவர்கள் ஊடாக அவர்களின் வீடுகளின் வசிக்கும் வாக்காளர்களின் விபரங்கள் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட மாதிரிப் படிவங்கள் மூலம் உரிய நபர்களிடமிருந்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அந்த வருடத்தின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையில் 64% அளவிலான எண்ணிக்கையானோரின் அந்தத் தகவல்கள் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டன. இந்த வருடம் தொடக்கம் தொடர்ச்சியாக தேருநர் இடாப்பு மீளாய்வு சந்தர்ப்பத்தில் இந்த விபரங்கள் பதிவு அலுவலரால் சேகரிக்கப்பட்ட போதும், அதன் போது சிவில் நிருவாக நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் அதன் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது.

**(13) தோட்டப் பிரதேசங்களில் வாக்காளர்களின் அதிகரிப்பு.**

இலங்கையில் பெருந்தோட்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்காக இந்நாட்டுக்கு வருகைதந்த தொழிலாளர்களுக்கு, இலங்கை குடியுரிமை அல்லது இந்திய குடியுரிமை வழங்கும் எதிர்பார்ப்பில் இரு நாடுகளின் தலைவர்களுக்கு இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்பட்ட போதிலும், 1980 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் எந்தவொரு நாட்டினதும் குடியுரிமை கிடைக்கப்பெறாத நபர்கள் கணிசமான எண்ணிக்கையொன்று இந்நாட்டின் வசித்து வந்தனர். இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1988 ஆம் ஆண்டின் 39 இலக்க நாடற்றோருக்கு பிரசாவுரிமை வழங்கும் சட்டம் வெளியிடப்பட்டது. இதன் காரணமாக விஷேடமாக உரிய தோட்டப்பகுதி சார்ந்த பகுதிகளில் வாக்காளர்களாகப் பதியும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பின்வரும் 05 வாக்கெடுப்பு பிரதேசங்களுக்குரிய வாக்காளர் பதிவு தொடர்பான 1986 தொடக்கம் 1989 வரையிலான விபரங்கள் இதற்குச் சான்றுபகிர்கின்றன.

| வாக்கெடுப்புப் பிரிவின் பெயர் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 1986 | 1989 |
| நுவரேலியா – மஸ்கெலியா | 96,473 | 184,180 |
| பசறை | 30,685 | 41,541 |
| ஹப்புத்தளை | 30,384 | 42,987 |
| கொத்மலை | 38,331 | 49,905 |


**(14) தேருநர் கணக்கெடுப்பைக் கண்காணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.**

1980 தசாப்தத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் வாக்காளர் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களின் மீளாய்வு ஆவணங்கள் மாவட்ட பதிவு உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைப்பதற்கு முன்னர், கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் தயாரித்துள்ள அ மற்றும் ஆ பட்டியல், வீட்டுத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்கள் கிராம அலுவலர் அலுவலகங்களில் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் பெயர்கள் குறிக்கப்படும் கட்சி முகவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அவர்கள் அவதானிக்கின்ற ஒரு விடயத்தைப் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனில் அதற்காக அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டவாறு, 1981 தேருநர் இடாப்பு மீளாய்வின் போது ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமொன்றுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மூலம் நியமனம் செய்யப்படுகின்ற முகவர்களுக்கு, வாக்காளர் கணக்கெடுப்பு அலுவலர்களுடன் கணக்கெடுப்பு கண்காணிப்பிற்காக வீடுகளுக்கு செல்வதற்கு இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் மூலம் தமது வெளிக்கள நிகழ்ச்சித் திட்டம், அரசியல் கட்சிகள் மூலம் பெயர்குறிக்கின்ற முகவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

09 ஆம் பக்கத்திற்கு





# மாகாண சபைத் தேர்தற் தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயித்தல்



எல்லை நிர்ணய ஆணைக்குழுவின்
தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம்
இணைப்புச் செயலாளர் திரு. நலின் சேமகே

## 1.0. அறிமுகம்

மாகாணங்கள் என்பது இலங்கையின் ஆரம்பக் கட்டத்திலான நிருவாக அலகுகளாகும். 1833 ஆம் ஆண்டில் முதன்முறையாக பிரித்தானிய ஆட்சியாளர்களால் இலங்கையின் மாகாண அலகுகள் பிரிக்கப்பட்டன. சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர் இரண்டாம் கட்டமான மாவட்ட ரீதியான நிருவாக அலகுகள் பிரிக்கப்பட்டு நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருபதாம் நூ ற்றாண்டின் நடுப்பகுதி வரை மாகாணங்கள் என்பது வெறும் சம்பிரதாயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. 1978 ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் யாப்பில் உட்படுத்தப்பட்ட பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம், மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிலையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதனடிப்படையில் தற்போது இலங்கையில் ஒன்பது மாகாண சபைகள் நடைமுறையில் உள்ளன.

## 2.0. நிருவாக அலகுகளின் வரலாறு

அநுராதபுர இராச்சியக் காலகட்டத்தின் போது இலங்கை மூன்று நிருவாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், இலங்கை நாடானது ரஜரட்டை, றுஹுணுரட்டை, மாயரட்டை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. காலத்திற்குக் காலம் இராச்சியங்கள் அதிகரித்தமையாலும், அந்நிய நாட்டினரின் வருகையாலும், எமது நாட்டின் சில பகுதியினர் அவ்வந்நியர்களுக்குக் கீழ்ப்படிந்தமை காரணமாகவும் நிருவாக வியூகங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் அவர்களால் கைப்பற்றப்பட்ட நாட்டின் கரையோரப் பிரதேசங்களை ஏற்கெனவே இருந்த நிருவாக அலகுகளின்படியே அவர்கள் நிருவகித்து வந்தனர். பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியின் போது அவர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை மூன்று நிர்வாகப் பிரிவுகளாகப் பிரித்து நிருவகித்து வந்தனர். அப்பிரிவுகள் யாவும் அதற்கு முன்னர் இருந்த திசாவ எனப்படும் நிருவாக அலகு முறைகளின் பிரகாரம் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் பிரித்தானியர்களாலும் அதே முறைகள் பின்பற்றப்பட்டன.

## 3.0. இலங்கையின் எல்லை நிர்ணயங்களும் மாகாணங்கள் அமைத்தலும்

1815 ஆம் ஆண்டில் பிரித்தானியர்களால் இலங்கை கைப்பற்றப்பட்டதும், 1829 ஆம் ஆண்டில் நிருவாக முறைகள் உட்பட்ட அந்நிய ஆதிக்கம் தொடர்பாக விமர்சன ஆய்வுளை மேற்கொள்ளும் பொருட்டு கோல்புரூக் - கமரன் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. நாட்டின் பூகோள ரீதியாக அலகுகள் பிரிக்கப்பட்டு இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென இந்த ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டது. அதன் பிரகாரம், 1833 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி ஒரே நிருவாகத்தின் கீழ் ஐந்து மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

## 4.0. மாகாண நிருவாக அலகுகள் அதிகரிக்கப்பட்டமை

அதன் பின்னர் சில வருடங்களுக்குள் மேலும் நான்கு மாகாணங்கள் உருவாக்கப்பட்டு எல்லாமாக ஒன்பது மாகாணங்கள் வரை அதிகரிக்கப்பட்டன.

- 1845 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் வடபகுதி வேறுபடுத்தப்பட்டு வடமேல் என்னும் புதிய மாகாணம் உருவாக்கப்பட்டது.
- 1873 ஆம் ஆண்டில் வட மாகாணத்தின் தென்பகுதி மற்றும் கிழக்கு மாகாணத்தின் வடமேற் பகுதி ஆகியவற்றின் பகுதிகள் ஒன்றிணைத்து தனியொரு மாகாணமாக வடமத்தி என்னும் புதிய மாகாணம் உருவாக்கப்பட்டது.
- 1886 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தினதும், கிழக்கு மாகாணத்தினதும், தென் மாகாணத்தினதும் பகுதிகள் வேறுபடுத்தப்பட்டு ஊவா என்னும் புதிய மாகாணம் உருவாக்கப்பட்டது.
- 1889 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தின் ஒரு பகுதி வேறுபடுத்தப்பட்டு சப்ரகமுவ என்னும் புதிய மாகாணம் உருவாக்கப்பட்டது.

## 5.0. மாகாண சபைகள் அமைத்தல்

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன், 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆந் திகதி இந்து - லங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஒரு முக்கிய விடயம் என்னவெனில், இலங்கை அரசாங்கத்தினால் மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்பதாகும். அதன் பிரகாரம், 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பதின்மூன்றாம் திருத்தம் உட்படுத்தப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆந் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தற்போது இலங்கையில் ஒன்பது (09) மாகாணங்கள் உள்ளன. 1987 ஆம் ஆண்டின் இந்து - லங்கா ஒப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டும் ஒரே மாகாணமாக இணைக்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் எண்ணிக்கை எட்டாக (08) மாற்றப்பட்டது. எனினும் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வேறு பிரிக்கப்பட்டன.

## 6.0. மாகாண சபைத் தேர்தல்கள்

1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்னும் கோட்பாடுகளுக்கமைவாக அந்தந்த மாகாணங்களுக்குள் அடங்கியுள்ள நிருவாக மாவட்டங்களுக்கென விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒன்பது மாகாணங்களிலும் உள்ள 25 மாவட்டங்களுக்கும் 437 மாகாண சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்தது. இதனை விட 2017 ஆம் ஆண்டு வரை மாகாண சபை ஒன்றை நிறுவுவதற்காக மாகாணத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவிற்கு 02 ஆசனங்கள் மிகை ஆசனங்களாக வழங்கப்பட்டு மேலும் 02 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.

## 6.1. மாகாண சபை உறுப்புரிமைகள்

01. ஒவ்வொரு மாகாண சபைக்கும் 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கைகள் உள்ளடக்கப்படும். (2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் 3(1) ஆம் உப பிரிவு)

02. மாகாண சபைத் தேர்தல்களின் போது அம்மாகாண சபைகளுள் அடங்குகின்ற நிருவாக மாவட்டங்களே தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கப்படுகின்றன.

03. மாகாண சபைகளுக்காக அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கைகள் தொடர்பாக பின்வரும் அடிப்படையில் தேர்தல் ஆணையாளரால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

(அ) குறித்த நிருவாக மாவட்டத்தில் உள்ள குடியிருப்பாளர்கள் 40,000 பேருக்கு ஒரு உறுப்பினர் என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் பிரகாரம் இவ்வாறு 40,000 என்னும் எண்ணிக்கை திரட்டப்பட்டு அதற்கமைய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(ஆ) குறித்த நிருவாக மாவட்டத்தின் 1000











சதுர கிலோ மீட்டர்களுக்கு ஒரு உறுப்பினர் என்ற வகையில் தெரிவு செய்யப்படுவர். இவ் அத்தியாயத்தில் நிருவாக மாவட்டத்தின் நிலப்பரப்பு கவனத்தில் மேற்கொள்ளப்படும்.
எனினும் இந்த உபஅட்டவணையின் பிரகாரம் ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், ஜனாதிபதியினால் குறித்தொதுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கையை ஒத்ததாக இருப்பினும், குறித்த சட்டத்தின் 61(அ) அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கையிலும் பார்க்க இருவர் குறைந்த எண்ணிக்கையாகவே இருத்தல் வேண்டும். (2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 3(3)(ஆ) உப பிரிவு)

ஏதேனுமொரு மாகாணத்தில் மாகாண சபையை நிறுவுவதற்காக நடாத்தப்படும் தேர்தலின் போது குறித்த மாகாணத்தினுள் அடங்கியிருக்கும் நிருவாக மாவட்டங்களே தேர்தல் மாவட்டங்களாகக் கணிக்கப்படுமென்பதனால், இங்கு தேர்தல் மாவட்டத்திற்கான எல்லை நிர்ணயம் என்பது பொருத்தமற்ற விடயமாகும். மாகாண சபைக்கான மொத்த உறுப்பினர் எண்ணிக்கை (மாகாண சபைக்கான மிகை ஆசனங்கள் உட்பட) மேல் மாகாணத்திற்கு 104 உம், மத்திய மாகாணத்திற்கு 58 உம், தென் மாகாணத்திற்கு 55 உம், வட மாகாணத்திற்கு 38 உம், கிழக்கு மாகாணத்திற்கு 37 உம், வடமத்திய மாகாணத்திற்கு 33 உம், ஊவா மாகாணத்திற்கு 34 உம், சப்ரகமுவ மாகாணத்திற்கு 44 உம் என்னும் எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படுவர்.

முதன்முறையாக 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆந் திகதி வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் போது ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பிரித்தொதுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. (2 மிகை ஆசனங்கள் நீங்கலாக)

| | |
|---|---|
| கொழும்பு....................40 | கம்பஹா.................40 |
| களுத்துறை................22 | கண்டி.....................29 |
| மாத்தளை....................11 | நுவரெலியா.............16 |
| காலி.............................22 | மாத்தறை................17 |
| அம்பாந்தோட்டை ...17 | யாழ்ப்பாணம்...........16 |
| கிளிநொச்சி ...............04 | மன்னார் .................05 |
| வவுனியா.....................06 | முல்லைத்தீவு ......05 |
| மட்டக்களப்பு ..............11 | அம்பாறை................14 |
| திருகோணமலை .......10 | குருநாகல் ..............34 |
| புத்தளம்........................16 | அநுராதபுரம்...........21 |
| பொலொன்னறுவை ...10 | பதுளை....................18 |
| மொணறாகலை .........14 | இரத்தினபுரி.........24 |
| கேகாலை....................18 | |

## 6.2. 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டம்

2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்திய) சட்டத்தினால் புதிய கலப்பு முறையிலான தேர்தல் முறை (பேர முறை / எளிமையான பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை) அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு நிருவாக மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 50 வீதமானோர் எளிமையான பெரும்பான்மை முறையில் தெரிவு செய்யப்படுவதுடன், எஞ்சிய 50 வீதமானோர் மாவட்ட மட்டத்தினலான விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் (மேலதிக உறுப்பினர் பட்டியலிலிருந்து) தெரிவு செய்யப்படுவர்.

## 7.0. 2017 ஆம் ஆண்டின் மாகாண சபைகளுக்கான தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் நிர்ணயித்தல்.

குறித்த சட்டங்களின் விதிமுறைகளுக்கு அமைவாக தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காக ஐந்து பேர் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவொன்று 2017.10.04 ஆந் திகதி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் திருத்திய சட்டத்தினால் மூலச் சட்டத்தின் 3அ(1) ஆம் பிரிவு தொடக்கம் 3அ(11) ஆம் பிரிவு வரையான சட்டரீதியான அதிகாரங்கள் இக்குழுவிற்கு வழங்கப்பட்டன.

## 7.1. நிருவாக மாவட்டங்கள் 25இலும் நடைமுறையிலுள்ள மாகாண சபைத் தேர்தல் மாவட்டங்கள்

கடந்த 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு, மற்றும் மாவட்டத்தின் நிலப்பரப்பு ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான உறுப்பினர்களின் எண்ணிக்கைகள் தொடர்பான தீர்மானம் தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது. குறித்த தேர்தல் மாவட்டங்களின் அடிப்படையில் 50 வீதமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய தீர்மானத்தை எல்லை நிர்ணயக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. குறித்த எண்ணிக்கையைக் கணிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 25 மாவட்டங்களிலும் 18 மாவட்டங்களது உறுப்பினர் எண்ணிக்கை அவ்வாறு கணிப்பிடப்பட்டு முழு எண்ணிக்கையாக்கப்பட்டது. ஏனைய 7 மாவட்டங்களிலும் முழு எண்ணிக்கை மற்றும் அரை எண்ணிக்கையாக இருந்தபோது அரைக்கணிப்பீட்டு முறையில் உறுப்பினர் எண்ணிக்கையின் அடுத்து வரும் முழு எண்ணிக்கையாகக் கணிப்பிடப்பட்டது.

ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கொழும்பு.....................20 | கம்பஹா.................20 |
| களுத்துறை.................11 | கண்டி.....................15 |
| மாத்தளை...................06 | நுவரெலியா.............08 |
| காலி.............................11 | மாத்தறை...............09 |
| அம்பாந்தோட்டை.....07 | யாழ்ப்பாணம்..........08 |
| கிளிநொச்சி ..............02 | மன்னார் .................03 |
| வவுனியா....................03 | முல்லைத்தீவு .......03 |
| மட்டக்களப்பு .............06 | அம்பாறை...............07 |
| திருகோணமலை .......05 | குருநாகல் ..............17 |
| புத்தளம்.......................08 | அநுராதபுரம்...........11 |
| பொலொன்னறுவை ....05 | பதுளை...................09 |
| மொணறாகலை..........07 | இரத்தினபுரி..........12 |
| கேகாலை....................09 | |

முழு எண்ணிக்கை – 222

## 7.2. எல்லை நிர்ணயச் செயற்பாடுகள்


இந்த விடயம் தொடர்பாக ஆர்வமுள்ள அரசியற் கட்சிகள், மக்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை எழுத்து மூலமாக வழங்குமாறு அவர்களிடம் எல்லை நிர்ணயக் குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. பொதுமக்களின் கருத்துக்களைச் செவிமடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 25 மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. இக்காலப்பகுதியில் குழுவின் அங்கத்தவர்கள் 24 மாவட்டங்களுக்குச் சென்றிருந்தனர். அறிக்கை தயாரிப்பதற்கான விடயங்களைச் சேகரிப்பதற்காக பொதுமக்களின் மற்றும் மதத் தலைவர்களின் அபிப்பிராயங்களையும், முன்மொழிவுகளையும் பெற்றுக் கொண்டனர். பொதுமக்கள் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்டச் செயலகங்களுக்கு வருகை தருமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. குழுவினருக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான எழுத்து மூலமான, வாய் மூலமான 678 முன்மொழிவுகளும், கருத்துக்களும் கிடைக்கப் பெற்றன. இக்கருத்துக்கள் மூலம் ஒன்பது மாகாணங்களுக்கும் நூற்றுக்கு 50 வீதமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாகாண சபைகளுக்காக 222 தேர்தல் மாவட்டங்களை உருவாக்குவதற்கும் உதவியாக அமைந்ததுடன் அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்பட்ட மூலச் சட்டத்தின் 3அ(11) ஆம் பிரிவிற்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிக்கையை எல்லை நிர்ணயக் குழுவினரால் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆந் திகதி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அலுவல்கள் அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டது.

மாகாண சபைக்குரிய தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயங்கள் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் முன்வைத்துள்ள எழுத்து மூல, வாய் மூலக் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பவற்றின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக தயாரிக்கப்பட்ட விளக்கங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிருவாக மாவட்டங்களை தேர்தல் மாவட்டங்களாக இனங்காணப்பட்ட போது குழுவினரால் அவதானிக்கப்பட்ட விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள அத்தியாயங்களில் அவற்றிற்குரிய மாவட்ட இலக்கங்கள், பெயர்கள், சனத்தொகை மற்றும் அவை உள்ளடங்குகின்ற பிரிவுகளுக்குரிய விடயங்கள் தொடர்பான சுருக்கக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும், குழுவின் அபிப்பிராயங்களும், கொள்கைத் திட்டமிடலின் போது எதிர்வரும் காலத்தில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.









06 ஆம் பக்கத்திலிருந்து

## இலங்கையின் வாக்காளர் கணக்கெடுப்பு மற்றும் பதிவு செய்தல் செயற்பாடுகளின் பரிணாம வளர்ச்சி....

**எழுத்து மூலம் கணக்கெடுப்பு அலுவலருக்கு கையளிப்பதற்குப் பதிலாக பற்றுச் சீட்டொன்றை வீட்டுத்தலைவருக்கு ஒப்படைத்தல்.**

வருடாந்தம் வாக்காளர் கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக கணக்கெடுப்பு அலுவலர்கள் மூலம் வீட்டுத் தலைவருக்கு கையளிக்கப்படும் படிவம் பூரணப்படுத்தப்பட்டு மீண்டும் கையளிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக பற்றுச் சீட்டொன்று மேற்படி அலுவலரால் வீட்டுத் தலைவருக்கு கையளிக்க வேண்டுமென 1996 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது. இது வீட்டுத் தலைவருக்கும் மற்றும் கணக்கெடுப்பு அலுவலருக்கும் தனது பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டதென்பதை உறுதி செய்வதற்கான பொருத்தமான சாட்சியமொன்றாக அமைந்தது.

**(16) 1983 தொடக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாக்காளர் கணக்கெடுப்பு**

1980 தசாப்தம் தொடக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக மேற்படி பிரதேசங்களின் பொது நிருவாக நடவடிக்கைகள் தடைப்பட்டதோடு மற்றும் மக்கள் இடப்பெயர்வும் அதிகளவில் இடம்பெற்றது. இதன் காரணமாக வாக்காளர் கணக்கெடுப்பு மேற்கொள்ளல் சிரமமான பிரதேசங்களில் தேருநர் இடாப்புக்கள், முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடுத்த வருடத்திற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் மூலம் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டன. இதன் காரணமாக சாதாரண வாக்காளர் கணக்கெடுப்பு அலுவல்கள் இப்பிரதேசங்களில் பொது நிருவாக நடவடிக்கைகள் மீண்டும் தாபிக்கப்பட்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. நபர்கள் மீண்டும் முதல் வதிவு இடங்களில் வசிக்கும் முன்னேற்றம் மற்றும் அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பு உறுதிசெய்தல் ஆகிய விடயங்களின் அடிப்படையில் ஆகும். இந்த நிலைமைகள் 1980 முதல் 2010 வரையான காலப்பகுதியினுள் வெளியிடப்பட்ட தேர்தல்கள் ஆணையாளரின் வருடாந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

### முடிவுரை

இலங்கையில் தேர்தல் முறைமை ஆரம்பிக்கப்பட்ட 1911 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேருநர் கணக்கெடுப்புச் சட்டம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குவதற்கு இந்தக் கட்டுரை மூலம் முயற்சித்தமை காரணமாக, அதற்கான முக்கிய விடயங்கள் மாத்திரம் பொழிப்பாக இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

# வருடாந்த தேருநர் இடாப்புக்களின் திருத்தச் செயற்பாடுகள்

- கிராம அலுவலர்கள் மற்றும் விசேட கணக்கெடுப்பாளர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புக்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடாத்துதல்.
- தேருநர் இடாப்புக்களில் பெயர்களைப் பதிவதன் முக்கியத்துவம் பற்றி தெளிவு படுத்தும் நோக்குடன் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சிடல் ஊடகங்கள் மூலமாக பிரச்சாரங்களை மேற்கொள்ளல், விசேடமாக இலங்கையில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் தெரியப்படுத்துதல், செய்தித்தாள் அறிவித்தல்கள், சிறு வீடியோ நிகழ்ச்சிகள் மூலமான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கணக்கெடுப்புப் படிவம் (பீ.சீ. படிவம்) இலங்கையிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் அல்லது அதன் பிரதான குடியிருப்பாளர்களுக்கு விநியோகித்தல்.
- வாக்காளர் தின வைபவங்கள், நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதன் மூலம் தேருநர் இடாப்புக்களில் பெயர்களைப் பதிவதன் முக்கியத்துவம் பற்றி மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் பரந்தளவிலான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்புப் படிவத்தினை (பீ.சீ. படிவம்) குடியிருப்பாளர்களிடமிருந்து கிராம அலுவலரால் அல்லது விசேட கணக்கெடுப்பாளரால் ஏற்றுக் கொள்ளல்.
- தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட வேண்டிய பெயர்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருப்பின் அவற்றைக் குறித்துக் கொள்ளலும், கிராம அலுவலரால் அல்லது விசேட கணக்கெடுப்பாளரால் சிபாரிசு செய்யப்படாத பெயர்களுக்குக் கடிதம் அனுப்புதலும்.
- தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்ய முடியாமற் போனவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள UE படிவம், கடிதம் மூலமான வேண்டுகோள், மின்னஞ்சல் ஆகிய முறைகளிலான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல்
- கடந்த வருட தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் பெயர்களின் பட்டியல் (அ நிரல்), எதிர்வரும் வருட தேருநர் இடாப்பிற்கு உட்சேர்க்கப்படும் பெயர்களின் பட்டியல் (ஆ நிரல்) ஆகியவற்றைத் தயாரித்தலும், அவற்றைப் பரீட்சித்தலும்.
- இரட்டைப் பதிவுகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்காக குறித்த நபர்களுக்குக் கடிதங்கள் அனுப்புதலும், அவற்றிற்கான பதில்களைப் பெற்ற பின்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- 'அ நிரல்', 'ஆ நிரல்' என்பவற்றை அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள் ஆகியவற்றில் காட்சிப்படுத்துதல்.
- தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்யத் தவறியவர்களுக்கான உரிமை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளல்.
- தேருநர் இடாப்பில் உள்ள பதிவுகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆட்சேபணைகளை உரிய படிவங்கள் மூலம் ஏற்றுக் கொள்ளல்.
- 2018 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்படாத பெயர்களுக்குரிய நபர்களுக்கு 2018.08.30 ஆந் திகதி குறுஞ்செய்தி மூலம் அறிவித்தல்.
- கிடைக்கப் பெற்றுள்ள உரிமை கோரல்கள், ஆட்சேபணைகள் தொடர்பாக உத்தியோகபூர்வமான விசாரணைகள் மற்றும் களப்பரிசோதனைகள் நடாத்துதல்.
- உரிமை கோரல், ஆட்சேபணை என்பவற்றிற்கான விசாரணைகளின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தேருநர் இடாப்பிற்குப் பெயர்களை உட்படுத்துதல் அல்லது நீக்கப்படுதல், பீ.சீ. படிவங்களைப் பரீட்சித்தல், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், பெயர்கள் ஆகியவற்றின் குறைபாடுகளைத் திருத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- உரிமை கோரல், ஆட்சேபணை என்பவற்றின் தீர்மானங்களின் அடிப்படையில் இரட்டைப் பதிவுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேருநர் இடாப்பின் மூலப்பிரதியை அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும், மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்துதல்.
- வருடாந்த தேருநர் இடாப்பு உறுதிப்படுத்துதல்.







# தேருநர் இடாப்பு மீளாய்வு - 2018

ஸ்ரீன் யாபா பொரலெஸ்ஸ
உதவித் தேர்தல் ஆணையாளர் (பாராளுமன்றத் தேர்தல்கள்)

தகைமையுடைய அனைத்துப் பிரஜைகளினதும் வாக்குரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் மீளாய்வு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டுள்ளன. இம்முறை தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளுடன், தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம் பற்றிய செய்தியை மக்களுக்கு வழங்கும் பொருட்டு, வாக்காளர் தின நிகழ்வுகள் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நடாத்தப்பட்டன. **'உண்மையான ஜனநாயகம் வாக்குரிமையில் தங்கியுள்ளது'** என்பதே இம்முறை வாக்காளர் தினத்தின் தொனிப்பொருளாக அமைந்திருந்தது.

## 2018 ஆம் ஆண்டு வாக்காளர் தினத்தையொட்டிய நிகழ்வுகள்

**2018.06.01 – கேகாலை மாவட்டம்**
இம்முறை வாக்காளர் தினத்தையொட்டி, வரலாற்றில் முதன்முறையாக கொழும்பிலிருந்து பதுளை வரை செல்லும் மலையகப் புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருந்த பயணிகளுக்கு வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டமை விசேடமான நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கொழும்பிலிருந்து றம்புக்கனை வரை அதே புகையிரதத்தில் பயணித்த பின்னர் அங்கிருந்து இரதபவனியாக கேகாலை நகரத்திற்குச் சென்றனர். அங்கிருந்து நடைபவனியாக கேகாலை நகர சபை மண்டபத்திற்குச் சென்று அங்கு பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டது. இவ்வைபவம் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளரின் தலைமையில் இடம்பெற்றது.

**2018.06.04 – மொணராகலை மாவட்டம்**
மொணறாகலை மாவட்ட நகர சபை மண்டபத்தில் இடம் பெற்ற வாக்காளர்களைத் தெளிவூட்டும் நிகழ்விற்கு மாவட்ட செயலகத்தின் அலுவலர்களும், பாடசாலை மாணவர்களும் பங்குபற்றியதுடன், அவர்களது நடைபவனியும் இடம் பெற்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட பல அலுவலர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

**2018.06.05 – பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற நிகழ்வு**
வாக்காளர்களாகப் பதிவதன் முக்கியத்துவம் பற்றி பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நோக்குடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடாத்தப்பட்ட நிகழ்வில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.06.07 – களுத்துறை மாவட்டம்**
களுத்துறை மாவட்டத்தின் நகரப் பகுதி மற்றும் அதனை அண்மித்த கிராமங்கள் ஊடாக ரதபவனி இடம் பெற்றதுடன், அங்கு வாழும் பல்வகையான இனங்கள், மதங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நலின் அபேசேகர அவர்கள் உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.06.07 – யாழ்ப்பாண மாவட்டம்**
வட மாகாணத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றதுடன், நகர மத்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவனியும், பொதுக்கூட்டமும் அங்கு இடம் பெற்றன. இந்நிகழ்வுகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரான பேராசிரியர் ரத்னஜீவன் எச். ஹூல் அவர்கள் உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.06.08 – அநுராதபுர மாவட்டம்**
வட மத்திய மாகாணத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் மதவாச்சி நகரில் இடம் பெற்றதுடன், அந்நகரில் மக்களின் நடைபவனியும், பொதுக்கூட்டமும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை) உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.


**2018.06.12 – மாத்தறை மாவட்டம்**
மாத்தறை மாவட்டத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் தெனியாய பிரதேசத்தில் இடம் பெற்றதுடன், அப்பிரதேச மக்களின் நடைபவனியும், பொதுக்கூட்டமும் அங்கு இடம் பெற்றன. இந்நிகழ்வுகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளர் உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.06.23 – அம்பாறை மாவட்டம்**
கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவரான பேராசிரியர் ரத்னஜீவன் எச். ஹூல் அவர்களின் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வுகளும், ஏனைய நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன் இவற்றிற்கு மேலதிகத் தேர்தல் ஆணையாளர் உட்பட பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.06.25 – புத்தளம் மாவட்டம்**
கல்பிட்டி பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், அந்நகரில் மக்களின் நடைபவனியும், பொதுக்கூட்டமும் இடம் பெற்றன. இந்நிகழ்வுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரான மகிந்த தேசப்பிரிய அவர்களதும், ஆணைக்குழுவின் அங்கத்தவரான பேராசிரியர் ரத்னஜீவன் எச். ஹூல் அவர்களதும் தலைமையில் இடம்பெற்றன.

**2018.07.03 – மாத்தளை மாவட்டம்**
மாத்தளை மாவட்டத்தில் வாழும் மக்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், அந்நகரில் மக்களின் நடைபவனியும், பொதுக்கூட்டமும் இடம் பெற்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளுக்கு பல அலுவலர்களும் பங்குபற்றினர்.

**2018.08.06 – கொழும்பு மாவட்டம்**
கொழும்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட பெண் அங்கத்தவர்களைத் தெளிவூட்டும் வகையிலான நிகழ்வுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவரான ரத்னஜீவன் எச். ஹூல் அவர்கள் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றன.




2012 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த வாக்காளர் தின நிகழ்வுகளின் முக்கிய





நோக்கம் யாதெனில், வாக்காளர் இடாப்பில் பெயர்களைப் பதிவதன் முக்கியத்துவம் பற்றி மக்களுக்குத் தெளிவூட்டுதலாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டுள்ள இவ்வாறான தெளிவூட்டல் நிகழ்வுகள் மற்றும் கல்வி சார்ந்த நிகழ்வுகள் ஆகியவற்றின் மூலம் கடந்த வருடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

## 2018 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு மீளாய்வின் கீழ் செயற்படுத்தப்பட்ட விசேட நிகழ்வுகள்

- **புதிதாக பீசீ படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை**
  தற்போது பயன்படுத்தப்படும் பீசீ படிவங்கள் (வாக்காளர்கள் பதிவு செய்தல் படிவங்கள்) அளவில் பெரிதாக இருக்கும் காரணத்தினால் அவற்றைக் கையாள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என கிராம அலுவலர்களின் சங்கமும், ஏனையோரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆகையால் அப்படிவத்தின் அளவைக் குறைப்பதுவே உகந்தது எனக் கருதப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவினால் புதிய படிவத்தை அறிமுகப்படுத்தும் முதற் கட்ட நிகழ்வுகளாக நாட்டின் 14 கிராம அலுவலர் பிரிவுகளில் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கீழே காட்டப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்படி நடவடிக்கைகள் இடம்பெற்றன.

| மாவட்டம் | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|
| கொழும்பு | 505 பீ – தொடன்கஹஹேன |
| கம்பஹா | 97 – திவுலப்பிட்டி |
| | 160 – உடையார்தோப்பு |
| களுத்துறை | 615 எப் – வேவல மேற்கு |
| | 730 – வெட்டும்கட தெற்கு |
| | 618 சீ – போராவதண்டுவ மேற்கு |
| கண்டி | 1075 – எத்கால மேற்கு |
| | 246 – ஓகஸ்டாவத்த |
| | 254 – மல்வத்த |
| காலி | 98 ஏ – மடவலமுல்ல வடக்கு |
| | 25 கே – பூஜாகல்லென |
| குருநாகல் | 1459 – பிங்கிரிய |
| புத்தளம் | 497 ஏ – தும்மோதர கிழக்கு |
| பதுளை | 67 எப் – வட்டகமுவ |
| கேகாலை | 37 ஏ – வடுவாவல வடக்கு |

இந்த பரீட்சார்த்த செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன், கிராம அலுவலர்களதும், பொதுமக்களதும் பாராட்டுக்கு அவை இலக்காகின. குறித்த படிவத்தை மேலும் சிறப்பாக அமைப்பதற்காக அவர்களது கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக அனைத்து கருத்துக்களையும் ஆராய்ந்து இனிவருங் காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் புதிய படிவங்களை விநியோகிப்பது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது விடுபடும் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக விசேட செயன்முறைகள் தயாரித்தல்**
  வாக்காளர் இடாப்புக்கள் தயாரிக்கப்படும் வேளையில் விடுபடும் வாக்காளர்கள் தொடர்பாக இம்முறை வாக்காளர் இடாப்பின் மீளாய்வின் போது கவனம் செலுத்தப்பட்டது. சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறான வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வசிக்கும் மக்கள்**
  இவ்வாறான மக்கள் தாம் வசிக்கும் வாடகை அல்லது குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட வீடுகளில் வாழும் வாக்காளர்களைப் பதிவு செய்கின்ற போது "R" என்னும் குறியீட்டைப் பயன்படுத்துவதன் மூலம் அவ்வாறான வீடுகளை இனங்காண முடியும். அத்துடன் வீட்டுரிமையாளர்களின் சம்மதத்தைப் பெறவேண்டிய தேவையையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

- **வெளிநாடுகளில் வசிப்பவர்கள்**
  தொழில் காரணமாகவோ அல்லது கல்வி நடவடிக்கை காரணமாகவோ தற்காலிகமாக வெளிநாடுகளில் தங்கியிருப்போர் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான தகைமை இருப்பின் அவர்களின் வழக்கமான முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **நாடோடி மக்களைப் பதிவு செய்தல்**
  நாடோடி மக்களைப் பதிவு செய்வதற்காக அவர்களது வசிப்பிடம் தொடர்பான தகவல்கள் மாவட்ட ரீதியாகச் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- **தோட்டப்பகுதி மக்களைப் பதிவு செய்தல்**
  தோட்டப்பகுதிகளில் வாழும் மக்கள் குறித்த தோட்டங்களில் தொழில் புரியாது வெளியிடங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாக இருப்பின் அவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்காக விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- **முதியோர் இல்லம் மற்றும் முகாம்களில் வாழ்கின்ற மக்களைப் பதிவு செய்தல்**
  இவ்வாறான மக்களை அவர்களது முன்னைய வசிப்பிடங்களில் பதிவு செய்வதற்கோ அல்லது முதியோர் இல்லத்திலேயே பதிவு செய்வதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- **தொழில் காரணமாக தமது சொந்த இடங்களிலிருந்து நகரங்களுக்குச் சென்று வாழ்கின்ற மக்களைத் தற்காலிகமாக அவ்விடங்களில் பதிவு செய்தல்**

- **வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங்கள் பிரதான குடியிருப்பாளர்களுக் கிடைக்கப் பெறுதல் தொடர்பான ஆய்வுகள்**

- **வாக்காளர் இடாப்பு மீளாய்வின் போது விடுபடும் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக விசேட செயன்முறைகள் தயாரித்தல்**
  வாக்காளர்கள் கணக்கெடுப்புப் படிவங்கள் (பீசீ படிவங்கள்) மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கப் பெறாமை தொடர்பான முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்றுள்ளமையால், அவை தொடர்பாக நாடளாவிய ரீதியில் அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ் ஆய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை எதிர்வரும் திட்டமிடல்களுக்குப் பயன்படுத்தவிருப்பதுடன், அதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **குறுஞ்செய்தி (SMS) மூலம் தெளிவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்**
  வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங்கள் தமக்குக் கிடைத்துள்ளனவா எனவும், தமது பெயர்கள் தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டுள்ளனவா எனவும் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் சகல கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களும் அறிந்து கொள்ளும் வகையில் குறுஞ்செய்தி அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **சிறு வீடியோக்கள் மூலம் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளல்**
  தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாடுகள் தொடர்பாகவும், பெயர்களைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட விவரண வீடியோப் படங்கள் தேருநர் இடாப்பு மீளாய்வு இடம்பெறும் காலகட்டத்தில் அனைத்து தொலைக்காட்சி ஊடகங்களின் ஊடாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்றிட்டங்கள் மூலமாகவும் கிடைக்கப் பெற்ற பாராட்டுதல்களின் அடிப்படையில் இவை மிகவும் வெற்றிகரமான செயன்முறைகளாகக் கருதப்படுகின்றன.

## 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது கீழ்க்காணும் காலஅட்டவணையின் பிரகாரம் இதுவரை பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2018.06.01**
ஆம் திகதி வாக்காளர் கணக்கெடுப்பின் ஆரம்பம்

**2018.06.04 – 2018.08.08**
ஆம் திகதி வரை குடியிருப்பாளர்களுக்கு கணக்கெடுப்புப் படிவம் விநியோகித்தலும், மீளப் பெறலும்.

**2018.07.23 – 2018.08.09**
பதிவு செய்யப்பட முடியாமற் போனவர்களின் முறைப்பாடுகள், UE படிவங்கள், மின்னஞ்சல்கள் ஏற்றுக் கொள்ளல்.

**2018.08.10 – 2018.09.08**
ஆம் திகதி வரை 'அ' மற்றும் 'ஆ' நிரல்கள் காட்சிப்படுத்துதல்

**2018.08.10 – 2018.09.08**
ஆம் திகதி வரை உரிமை கோரல்கள், ஆட்சேபணைகள் ஏற்றுக் கொள்ளல்

இந்நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஒக்டோபர் மாதத்தில் 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பினை உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களும் பொதுமக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கான சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்து 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பினைத் தயாரித்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகுகின்றன.



# பளிங்குச் சுவர்

## உரிமையானதும் உரிமையற்றதும்

**தரணி உபேக்கா வீரசேகர**
உதவித் தேர்தல் ஆணையாளர் (சட்டம்)

இருபத்தெட்டு வருடங்கள் கடந்து விட்டன. வாழ்க்கை என்பது சிலவேளைகளில் மெதுவாகப் பாய்ந்து செல்லும் அருவி போன்றது. வேறு சில நேரங்களில் வேகமாகப் பாய்ந்து வரும் சமுத்திரம் போன்றது. கடிகாரத்தில் ஐந்து மணி அடிக்கும் ஓசை கேட்டது. சிந்தனைகளில் மூழ்கியிருந்த நான் என் முன்னால் இருந்த இறுதிக் கடிதத்திலும் கையொப்பத்தை வைத்து அதன் மீது உத்தியோகபூர்வ முத்திரையையும் குத்தினேன்.

"உதுல ஹிமகர திசாநாயக்க, உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (திருகோணமலை)" என்னும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட உத்தியோகபூர்வ முத்திரையின் ஊதா நிற மை சற்றுச் சிதறியிருந்த முதல் இரண்டு வரிகள் மீது எனது பார்வை ஒரு கணம் நிலைத்து நின்றது. உத்தியோகபூர்வ முத்திரைப் பொறியை அளவுக்கதிகமாக அழுத்துவன் காரணமாகவே இவ்வாறான சிதறல்கள் ஏற்படுகின்றன. எனது பெயரையும், பதவியையும் பாதுகாத்துக் கொள்வதற்காக நான் எடுக்கும் முயற்சியை இந்தச் சிதறல்கள் எடுத்து இயம்புகின்றனவா?

நான் எனது ஆசனத்திலிருந்து எழுந்து எனது இருப்பிடத்திற்குச் செல்லத் தயாராகியது தான் தாமதம், பியசேன எனது அறையினுள் எட்டிப் பார்த்தான்.

"சேர் உங்களைப் பார்க்க யாரோ ஒரு இளம் பெண்மணி வந்திருக்கிறார்"

வெகு தொலைவில் இருந்து வரும் கடல் அலைகளின் ஓசையையும், பறவைகளின் ஓசையையும் தவிர இந்த அமைதியான ஊரில் வேறெந்த இரைச்சல்களும் கேட்கவில்லை. இருந்தாலும் எனது இதயத்தினுள் ஒலிக்கும் எனது கடந்த கால நினைவுகள் என்னைப் புண்படுத்துகின்ற ஓசையென்பது ஒரு இரகசியமல்ல. இராணுவ முகாம் இருந்த இடத்திற்கு அண்மையில் நிழல்தரு மரங்களின் கீழ் அமைந்த பாதை வழியாக தினமும் மாலை வேளைகளில் நடந்து செல்கின்ற போது எனது கடந்த கால இனிய நினைவுகள் வேதனை தருவதாக இருந்தாலும் அந்த நினைவலைகள் என்னுள் வருவதை தவிர்த்துக் கொள்ள என்னால் முடிவதில்லை.

எனது கடந்த கால ஞாபகங்கள் காரணமாகவே நானாக விரும்பி, கொழும்பிலிருந்து மிகத் தொலைவிலுள்ள இந்தத் திருகோணமலைக்கு எனது அலுவலகக் கடமையை ஏற்றுக் கொண்டு இங்கு வந்திருக்கின்றேன்.

நாம் விரும்பாத சம்பவங்களின் காரணமாக வரும் கவலைகளை விட விரும்பும் சம்பவங்களின் காரணமாக வரும் கவலைகள் அதிகமாக உள்ளன. "அந்தப் பெண்மணி வந்திருக்கிறதன் காரணம் என்ன என்று கேட்கவில்லையா?" என்று நான் பியசேனவைக் கேட்டேன்.

"சேர் உங்களைச் சந்தித்தே ஆலோசனை கேட்க வேண்டுமாம்"

"வரச் சொல்லுங்கள்"

கதவுகள் திறக்கும் ஓசையுடன் அக்காட்சியின் மீது எனது கண்கள் ஆயாசமாகவே சென்றன.

"கடவுளே அதே கண்கள்" "லோசனா இந்திவரி சமரதிவாகர" அவளது பெயர். இந்தச் சொற்கள் எனது குரலில் இருந்து வேகமாக வெளிவந்தன.

"அப்போ நீங்கள் என்னை யாரென்று கண்டுகொண்டீர்கள்."

"நிச்சயமாக நான் அவளை அறிந்து கொண்டிருக்க வேண்டுமல்லவா? வெகு நாட்களுக்கு முன்னர் ஆயிரம் நங்கையர்களுக்கு மத்தியிலும் நான் அவளை மாத்திரம் கண்டு கொள்ளும் இயல்பு என்னிடம் இருந்ததல்லவா? ஏதோவொரு இனம்புரியாத வேதனைகளைச் சுமந்து கொண்டு நிற்கும் அவளது கண்கள், அவளது புன்னகை, குழி விழும் கன்னங்கள், நீண்ட கூந்தல் இவை யாவும் அன்று நான் பார்த்த அதே தோற்றம் இன்றும் என் நினைவுகளை விட்டு நீங்கவில்லை.

பல்கலைக் கழகத்திலிருந்து விடுமுறைக்காக வந்திருந்த போது அவளுடன் நான் கோணேஸ்வரம் கோயிலுக்குச் சென்றிருந்த நாட்கள், நிலாவெளிக் கடற்கரையில் மணிக்கணக்காக நாம் ஒன்றாக இருந்து காதல் கதைகள் பேசிய நாட்கள் யாவும் இன்று வரை எனது நினைவை விட்டு அகலவில்லை. அன்று நான் ஒரு வேலையில்லாப் பட்டதாரியாக இருந்தேன். அதன் காரணமாகவே அவளது பெற்றோர்கள் எமது உறவிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள். இந்த விடயம் எனக்கு மிகவும் கடுமையான வேதனைகளைத் தந்திருந்தன. கண்ணீர் சிந்தியவாறு அவள் என்னிடமிருந்து விடை பெற்றுச் சென்ற நாள். இன்றும் அக்காட்சி சாம்பல் நிறம் பூசப்பட்ட சுவர் போன்று அழியா ஓவியமாக என் இதயச் சுவரில் இன்றும் நிலைத்துள்ளன.

"என்ன திடீரென்று என்னை ஞாபகப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என் மனதில் எழுந்த வேதனைகளை சொற்கள் மூலமாக வேகமாக விட்டெறிந்தேன்.

"நான் பெரிய பிரச்சினையில் மாட்டிக் கொண்டேன், ஹிமகர"

"என்ன சொல்கிறீர்கள்?"

"உரிமை தொடர்பான பிரச்சினை"

அவள் கேட்கவிருக்கும் கேள்விகளுக்குப் பதில் என்னிடம் மனப்பாடமாக இருக்கிறது.

"இப்படித் தான். தற்போது நீங்கள் வசிக்கும் இருப்பிடத்திற்குரிய விலாசத்தில் தான் உங்களை ஒரு வாக்காளராகப் பதிவு செய்ய முடியும். நீங்கள் வாக்காளர் விண்ணப்பப் படிவத்தில் அல்லது பீ.சீ. படிவத்தில் உங்கள் பெயரை எழுதி உங்கள் பிரதேச கிராம அலுவலருக்குக் கொடுக்க வேண்டும். உங்களுடைய பெயர் இரண்டு விலாசங்களில் சேர்க்கப்பட்டிருந்தால் அந்த இரண்டு விலாசங்களுக்கும் நாங்கள் கடிதங்களை அனுப்புவோம். உங்களுக்கு எந்த விலாசத்தில் பெயர் பதிவதற்கு அவசியம் என்பதை நீங்கள் அறிவிக்க வேண்டும்."

"ஹிமகர, நான் சொல்வது அந்த மாதிரியான உரிமையைப் பற்றி அல்ல. நான் சொல்வது நான் உங்களுக்கே உரியவள். எனக்கு அது நன்றாகத் தெரியும். கடைசியில் என்னுடைய பெற்றோர் உங்களை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். என்னுடைய வீட்டாரின் சம்மதம் பெறத் தாமதமாகி இருந்தாலும், இதுவரை உங்கள் விரல்களில் ஒரு மோதிரம் கூட அணியாமல் இருப்பதைப் பார்த்த போது நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன். இதற்காக நான் யாருக்கு நன்றி சொல்வது?"

என்னால் என் காதுகளையே நம்ப முடியாமல் ஒரு கணம் திகைத்துப் போய் நின்றேன். இறுதியாக நான் காதலித்த பெண்ணே எனது மனைவியாகப் போகின்றாள்.

**"லோசனா, எனக்கு ஒரு விடயம் தெளிவாகிறது. நீங்களும் சரியாக இலங்கையின் இறைமையைப் போல. கைவிட முடியாதது. இன்னொருவரின்**



**ஆலோசனைக் குழு**
மஹிந்த தேசப்பிரிய
சனாதிபதி சட்டத்தரணி நளின் ஜே. அபேசேகர
பேராசிரியர் இரத்தின ஜீவன் எச். ஹூல்
ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க
எச். எம். ரீ. ரீ. ஹேரத்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க

தொகுப்பு - சன்ன பீ. த. சில்வா
தொகுப்பு உதவி - அமில பிரசாத்
அச்சிடல் ஆலோசனை - ஜகத் சந்திரலால் த சில்வா, இலங்கை முதலீட்டுச் சபை
அச்சுப் பதிப்பு - அரசாங்க அச்சகம்
வெளியீடு - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு

**உங்கள் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு எழுதுங்கள்**
தொகுப்பாசிரியர் - புள்ளடியின் பலம்
தேர்தல் ஆணைக்குழு.
தேர்தல்கள் செயலகம்,
02, சரண மாவத்தை
இராஜகிரிய
இலங்கை.
(+94)0112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka

இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதனை எழுதிய எழுத்தாளர்களே பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு ஆக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்துக்களல்ல.